## ஒட்டன்சத்திரம் நகராட்சி

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை-III விதி எண்.2(2)ன் கீழ் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டமானது 14.03.2022 (திங்கள் கிழமை) அன்று நன்பகல் 12.15 மணியளவில் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற துணை தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- க.திருமலைசாமி
நகர்மன்றத் தலைவர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

நாள்.10.03.2022

**பொருள் : 1**

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டு காலமாக நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடத்தாமல் இருந்த நிலையை மாற்றி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடத்த உத்திரவிட்டு தமிழகம் முழுவதும் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி நகர்ப்புற மேயர், துணை மேயர், நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை மக்களுக்கு சேவை செய்ய பொறுப்பேற்க செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும், இந்நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் 16 நகர்மன்ற உறுப்பினர்களும் வெற்றி பெற உறுதுணையாக இருந்த மாண்புமிகு **இ.பெரியசாமி**.B.A, B.GL கூட்டுறவு துறை அமைச்சர் அவர்களுக்கும், வெற்றிக்கு அரும்பாடுபட்ட மண்ணின் மைந்தர் மாண்புமிகு **அர.சக்கரபாணி**.B.A உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்நகர்மன்றம் நன்றியினை தெரிவித்து தீர்மானம் இயற்றி பார்வைக்கு சமர்ப்பித்தல்.

**தீர்மான எண்.1**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படாதவாறு தேசிய நெடுஞ்சாலை துறை மூலம் சாலை விரிவாக்க பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.80.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் **மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும் மேற்படி பணியினை மேற்கொள்ள பெரு முயற்சி மேற்கொண்ட மண்ணின் மைந்தர் மாண்புமிகு **அர.சக்கரபாணி**.B.A உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி பார்வைக்கு சமர்ப்பித்தல்.

**தீர்மான எண். 2**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு (பேரூராட்சி நிலையிலிருந்து) நீண்ட காலமாக நகரில் சேகாரமாகும் குப்பைகளை கொட்டுவதற்கு இடம் இல்லாத நிலையில், பொதுசுகாதார பிரச்சனையை தீர்க்கும் பொருட்டு, இந்நகராட்சிக்காக காப்பிலியப்பட்டி கிராமம் புல எண்.614/4சி முதல் 639/5 முடிய உள்ள நிலத்தில் ஹெக்டேர் - 7.55.50, ஏக்கர் – 18, சென்ட் - 66 உள்ள நிலத்தினை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1786/2021, நாள்.10.08.2021-இன்படி, நகராட்சிக்கு உரக்கிடங்கு அமைக்க தானமாக பெற்றுத்தந்த மண்ணின் மைந்தர் மாண்புமிகு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் **அர.சக்கரபாணி** அவர்களுக்கு இந்நகராட்சியின் சார்பாக நன்றியினை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி பார்வைக்கு சமர்ப்பித்தல்.

**<u>தீர்மான எண். 3</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

மரங்கள் இயற்கையின் வரங்கள், மனிதனின்றி மரங்கள் வாழும். மரங்களின்றி மனிதனால் வாழ முடியாது, ஏனைய கோள்கள் எதிலும் இல்லாத தனி சிறப்பே பூமியில் நீர் இருப்பதும் மழை பொழிவதும் தாவரங்கள் வளரக்கூடிய சூழ்நிலை இருப்பது தான். மரங்கள் பூமிக்கும் மனிதர்களுக்கும் பல நன்மைகளை வழங்கி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலை, பூங்கா மற்றும் பொது இடங்களில் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

அனுமதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 4</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் தற்போது உள்ள மோட்டார்கள் இயக்குவது கூடுதல் குடிநீர் நீருந்து குறைவாக உள்ளதால், தேவைக்கு அதிகமாக நீர் இருப்பு உள்ள நிலையில், நகர் பகுதி பொதுமக்களுக்கு சரிவர குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையுள்ளதால், தலைமை நீரேற்று நிலைய விருப்பாட்சி பிரிவில் கூடுதலாக 50 ஹச்.பி மின் மோட்டார் இயக்க புதியதாக மின் இணைப்பு பெற மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தல்.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் குடிநீர் தேவையின் அவசியம் கருதி, கூடுதல் மின்மோட்டாருக்கான மின் இணைப்பு பெறவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

**<u>தீர்மான எண். 5</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 6</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 15, 16, 17 மற்றும் 18 ஆகிய வார்டு பொதுமக்களின் போக்குவரத்து பயன்பாட்டிற்கு உள்ள தரைப்பாலங்கள் இரண்டிலும் மழைக்காலங்களில் மழை வெள்ள நீர் தேக்கம் ஏற்பட்டு, பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும், பெரும் சிரமத்திற்குள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு, இரண்டு தரைப்பாலங்களிலும் வெள்ள நீர் தேங்காமல் தண்ணீர் வெளியேற்றும் வகையில் மோட்டார் மற்றும் அறை அமைத்து, பைப்லைன் மூலம் மழை வெள்ள நீர் வெளியேற்றும் வகையில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நலன் கருதி, மேற்படி மோட்டார் மற்றும் அறை அமைத்து பைப்லைன் மூலம் வெள்ள நீர் வெளியேற்றும் பணி மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.6</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 7</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் உள்ள ஓடைகளில் மழைக்காலங்களில் ஏற்படும் மழை வெள்ள நீர் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளுக்குள் செல்வதால், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மழைக்காலங்களில் சிரமத்திற்குள்ளாகும் நிலை ஏற்படுகிறது. நகராட்சி பகுதியில் உள்ள ஓடைகளை தூர் வாரி மழை வெள்ள நீர் பொதுமக்கள் வசிக்கும் பகுதிக்குள் செல்லா வண்ணம் வழிந்தோடும் வகையில் ஓடையின் இருபுறமும் கான்கிரீட் தளத்துடன் கூடிய தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள பெருக்கிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு, நகராட்சி பகுதியில் உள்ள ஓடையின் இருபுறமும் கான்கிரீட் தளத்துடன் கூடிய தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள திட்ட பிரேரனை தயார் செய்து அரசிடம் மான்ய நிதி பெற கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.7</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 8</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2022 முடிவுற்று நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்றதை தொடர்ந்து, இந்நகராட்சியில் ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர்கள் பயன்பாட்டுக்கு மட்டும் ஈப்பு வாகனம் உள்ளதால், புதியதாக பொறுப்பேற்ற நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக ஈப்பு வாகனம் கொள்முதல் செய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. புதியதாக பொறுப்பேற்ற நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்காக புதியதாக ஈப்பு வாகனம் கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மான எண்.8**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 18 வார்டுகளிலும் மேட்டுப்பகுதி மற்றும் குடிநீர் பைப்லைன் இல்லாத பகுதிகள் மற்றும் இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் காலங்களில் அவசர கால பயன்பாட்டிற்கு குடிநீர் விநியோகம் செய்ய 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டேங்கர் லாரி புதியதாக கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்கு விநியோகம் செய்ய 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் டேங்கர் லாரி புதியதாக கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மான எண்.9**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சிகளில் அனைத்து வார்டுகளிலும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மழைநீர் வடிகால் இல்லாத தெருக்களில் தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், சாலை மற்றும் வடிகால் நில அமைப்பு காரணமாக சில தெருக்களில் கழிவு நீர் தேக்கம் ஏற்படுகிறது. அவ்வாறு தேக்கம் ஏற்படும் பகுதிகளில் உள்ள கழிவு நீரை உறிஞ்சி வெளியேற்ற வேண்டியுள்ளதால், அப்பணிகள் மேற்கொள்ள 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீர் உறிஞ்சு வாகனம் புதியதாக கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி, 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவு நீர் உறிஞ்சி வாகனம் புதியதாக கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மான எண்.10**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பிற்கு 2022-2023-ஆம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஊதிய விதிகத்தில் தகுதி வாய்ந்த கம்பியாளர் 4 நபர்கள் மற்றும் மின் உதவியாளர் 4 நபர்கள் அமர்த்திக்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.21.57 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.11</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 18 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்ய 2022-2023-ஆம் ஆண்டிற்கு தேவையான ஒப்பந்தப்பணியாளர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஊதிய விதிகத்தில் தகுதி வாய்ந்த மின் பணியாளர்(நிலை-சி) 4 நபர்கள், மின் பணியாளர்(நிலை-பி) 2 நபர்கள், பராமரிப்பாளர்கள் 18 நபர்கள், பகுப்பாய்வு உதவியாளர்(நிலை-2) 1 நபர், ஓட்டுநர் 1 நபர் மற்றும் துலக்குநர் 1 நபர் என அமர்த்திக்கொள்ளவும், நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.70.84 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

**<u>தீர்மான எண்.12</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 13</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 15, 16, 17 மற்றும் 18 ஆகிய வார்டுகளில் பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக மேட்டுப்பகுதி மற்றும் இதர பகுதிகளில் குடிநீர் தரைமட்ட தொட்டி மற்றும் மேல் நிலைத்தொட்டி புதியதாக கட்டப்பட்டு பைப்லைன் இல்லாத தெருக்களில் புதியதாக பைப்லைன்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பகுதிகளில் தரைமட்ட தொட்டியிலிருந்து மேல் நிலை தொட்டிக்கு நீர் ஏற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால், மின் தடை நேரங்களிலும் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, தரைமட்ட தொட்டி அமைவிடத்தில் புதியதாக 20 ஹச்.பி திறன் கொண்ட புதியதாக ஜெனரேட்டர் வாங்கி பொருத்தும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மான எண்.13**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 14**

பொது மக்கள் நலன் கருதி ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள சாலைகள், தெருக்கள், நீர் நிலை பகுதிகள் மற்றும் அரசுக்கு சொந்தமான புறம்புகளில் உள்ள இடங்களில் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தவும், அவ்வாறு ஆக்கிரமிப்பு உள்ள பகுதிகளை வருவாய் துறை மூலம் நில அளவை செய்து அகற்ற மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :

1. அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சியின் நகரமைப்பு பிரிவில் நில அளவையர் பணியிடம் தோற்றுவிக்கப்படாததால், வருவாய் துறை மூலம் நில அளவை பணிகள் மேற்கொண்டு அத்துமால் செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற மன்றம் அனுதிக்கலாம்.

**தீர்மான எண்.14**

அனுமதிக்கப்பட்டது.

ஓம்/-க.திருமலைசாமி,<br>
நகர்மன்ற தலைவர்,<br>
ஒட்டன்சத்திரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,<br>
ஒட்டன்சத்திரம் நகராட்சி